டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.09.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 071- Madurai | Online Edition

# வேளாண்மை, வனம் குறித்த 9வது ஆசியான் இந்தியா அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது

புது தில்லி, செப்.10

வேளாண்மை மற்றும் வனம் குறித்த 9-வது ஆசியான் இந்தியா அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் 09.09.2026 அன்று புதுதில்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிலிப்பைன்ஸ் வேளாண் துறை அமைச்சர் பிரான்சிஸ்கோ பி.டியூ லாரெல், மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் ஆகியோர் இணைந்து தலைமை வகித்தனர்.

உணவு பாதுகாப்பு, ஊட்டச்சத்து, விவசாயிகளின் வாழ்வாதாரம், நீடித்த மற்றும் குறைந்த மாசு வெளியீட்டு மேம்பாடு, புதுமைக் கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மேம்பாடு, கிராமப்புற செழுமை வேளாண்மை, வன அமைப்புகளின் மீள்திறன் ஆகியவற்றை ஆதரிக்கும் ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்வதற்கான தனது உறுதிப்பாட்டை இக்கூட்டம் சுட்டிக்காட்டியது.

2045-ம் ஆண்டிற்கான உணவு, வேளாண்மை, வனத்துறை தொலைநோக்கு பார்வை குறித்த ஆசியான் தலைவர்களின் பிரகடனம், ஆசியான் உணவு, வேளாண்மை, வனத்துறை சார் திட்டம் 2026-2030 ஆகியவற்றையும் இக்கூட்டம் வரவேற்றது. பருவநிலை மாற்றம், தீவிர வானிலை நிகழ்வுகள், புவிசார் அரசியல், பொருளாதாரப் பதற்றங்கள், எரிசக்தி, உரங்கள், வேளாண் இடுபொருள் சந்தைகளில் நிலவும் ஏற்ற இறக்கங்கள், வர்த்தகம், சரக்குக் போக்குவரத்தில் ஏற்படும் தடங்கல்கள், தாவர, விலங்கு ஆரோக்கியம், தாவரப் பூச்சிகள், உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் உணவு, வேளாண்மை, வனத்துறை ஆகியவற்றின் மீது ஏற்படும் தாக்கங்கள் குறித்து இக்கூட்டத்தில் கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

# எண்ணெய்வித்துக்கள் சாகுபடியில் தன்னிறைவு பயிற்சி



திருச்சி, செப்.10

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், பம்பரம் சித்தி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் தன்னிறைவு தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா தலைமையில் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இதில் பயிர்களான எள், ஆமணக்கு, தென்னை, சூரியகாந்தி பயிர்கள் சாகுபடி நவீன தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். மேலும் நடப்பு சம்பா பருவத்திற்கு லால்குடி வட்டாரத்தில் அனைத்து நெல் ரகங்களும், பாரம்பரிய நெல் ரகங்கள், திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வாங்கி பயன்படுத்திட கேட்டுக் கொண்டார். இதில் நடப்பு சம்பா நெல் சாகுபடிக்கு முன் மண் மாதிரி எடுத்தல் அவசியம், மண் வள அட்டை அடிப்படையில் உரம் இடுதல், சான்று பெற்ற விதைகள் பயன்படுத்துதல் அவசியம் உயிர் உரங்கள் பயன்பாடு பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். வேளாண்மை கல்வி நிலையம் குமுளூர் முனைவர் வினோத் பேசுகையில், எள் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, விதை நேர்த்தி, களை மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். மேலும் வேளாண்மை பட்டய படிப்பு பயில ஆர்வமுள்ள மாணவர்களுக்கு விவசாயிகள் ஊக்கம் தர வேண்டும் என கேட்டுக்கொண்டார், இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை வேளாண்மை உதவி அலுவலர் ராஜசேகரன், லால்குடி வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்திருந்தனர். மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பயிற்சிக்கான ஊக்கத்தொகை மதிய உணவு வழங்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக் காயிலிருந்து மதிப்பூட்டப்பட் டபொருட்கள் தயாரித்தல் பயிற்சி 16.09.2 6 மற்றும் 17.09.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருத மலை சாலை வழி) நடைபெறும். கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அவையாவன

- நெல்லி பானங்கள் – பழரச பானம் மற்றும் தயார் நிலை பானம்
- நெல்லி ஜாம்
- தேன் நெல்லி, நெல்லி கேண்டி, நெல்லி மிட்டாய், பொடி மற்றும் துருவல்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) – பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**36. நண்டு சூப்**

**தேவையான பொருட்கள்**

நண்டு — 2

பூண்டு — 5 பல்

மிளகு — 1 டீஸ்பூன்

சீரகம் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

நண்டை வேக வைத்து சதை எடுத்து சூப்பில் சேர்த்து கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்கள் தயாரித்தல் பயிற்சி




ஈரோடு, செப்.10

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்து உள்ளதாவது. ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் கூரபாளையம் கிராமத்தில் 09.09.26 அன்று விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம் விஞ்ஞானி மு.சிவா, பயிர்களுக்கு தேவையான அங்கக இடுபொருட்களை எவ்வாறு தாயாரிப்பது அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது,எந்தபருவகாலங்களில் என்ன வகையான அங்கக இடுபொருட்களை பயிர்களுக்கு பயன்படுத்துவது என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்.

குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் முனைவர் கே.இளங்கோ பயிர்களுக்கு தேவையான அங்கக பூச்சி கொல்லிகள் தயாரிக்கும் முறைகள் அவற்றை உபயோகிக்கும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.மேலும் பயிர்களை நோய், பூச்சிகள் தாக்குவதற்கு முன்பு அங்கக இடுபொருட்களை கொண்டுஎவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத் தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன், உழவன் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

# சம்பா பருவத்தில் நெல் விதைப்பண்ணை அமைக்க அழைப்பு

திருச்சி, செப்.10

திருச்சி மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான சான்று பெற்ற விதைகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

நடப்பு சம்பா பருவத்தில் விதைப்பண்ணை அமைக்க ஆர்வம் உள்ள விவசாயிகள், நெல் விதைப்பண்ணை அமைத்து விதை உற்பத்தி செய்வதன் மூலம் கூடுதல் இலாபம் பெறலாம். விதைப்பண்ணை பதிவு செய்ய விரும்பும் விவசாயிகள் ஆதாரநிலை (F1/F2) நெல் விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலோ அல்லது தனியார் விதை விற்பனை நிலையங்களிலோ வாங்கி அதற்கான ரசீது மற்றும் வெள்ளை நிறச் சான்றட்டைகளுடன் பதிவு கட்டணம் – ரூ.25, விதை மாதிரி பரிசோதனை கட்டணம் – ரூ.80, வயலாய்வு கட்டணம் – ரூ.100 / ஏக்கர், செலுத்தி அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மூலமாகவோ அல்லது தனியார் விதை உற்பத்தி யாளர் மூலமாகவோ திருச்சி விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைப்பண்ணைகளை பதிவு செய்து கொள்ளலாம். அரசு மூலம் விதைப் பண்ணைகள் அமைக்கும் விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் அளிக்கப்பட்டு வருகின்றது.

விதைப்பண்ணை பதிவு செய்த வயல்களில் விதைச்சான்று அலுவலரர்களால் லக்கும் பருவம் மற்றும் முதிர்ச்சி பருவத்தில் வயல் ஆய்வு செய்யப்பட்டு வயல் தரம் உறுதி செய்யப்பட்ட



பின்னர் விதைச் சுத்திகரிப்பு செய்த விதைகளை, விதை பரிசோதனை நிலையத்தில் விதையின் தரம் உறுதி செய்யப்பட்ட பின் உற்பத்தி செய்த விதைகளுக்கு சான்றளிப்பு செய்ய அனுமதிக்கப்படுகின்றது.

எனவே விதைப்பண்ணைகள் அமைத்து சான்று விதைகள் உற்பத்தி செய்து கூடுதல் இலாபம் அடைய வேண்டுமாறு திருச்சி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி, திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்கள்.




# சொறிப்புல் களை மேலாண்மை முறைகள்

சொறிப்புல் என்பது பயிர்களுடன் நீர், ஊட்டச்சத்து, வெளிச்சம் மற்றும் இடத்திற்காக கடுமையாகப் போட்டியிடும் முக்கியமான களைச் செடியாகும். குறிப்பாக மக்காச்சோளம், கரும்பு மற்றும் சோளம் போன்ற பயிர்களில் இக்களை காணப்படுவதால், ஆரம்ப நிலையிலேயே இதனைக் கட்டுப்படுத்துவது அவசியம் ஆகும்.



**களைச்செடியைப் பற்றி**

**தாவரவியல் பெயர் :** ராட் போலியா கோச்சின் செனென் சிஸ் (Rottboellia cochin hinensis)

**ஆங்கிலப் பெயர்கள் :** Corn grass, Raoul grass, Guinea-fowl grass, Sugarcane wee (சோளப்புல், ரவுல்புல், கினியா–பவுல்புல், கரும்புவயல்களை)

இது விதைகள் மூலம் பெருகும் ஓராண்டுக் களைச் செடியாகும். ஒரு செடி அதிக எண்ணிக்கையிலான விதைகளை உற்பத்தி செய்யக்கூடியதால், களைச்செடிகளை விதை உற்பத்தி செய்யவிடாமல் ஆரம்ப நிலையிலேயே அகற்றுவது மிகவும் முக்கியம்.

களை விதைகள் மண், பாசன நீர், வேளாண் கருவிகள், பயிர் விதைகள் மற்றும் விலங்குகள் மூலம் ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கு பரவக்கூடும்.

**எவ்வாறு அடையாளம் காணலாம்?**

- உயரமாகவும் நேராகவும் வளரக்கூடிய புல்வகைக்களை.
- தண்டு பல கிளைகளாகப் பிரிந்து, அதிக பக்கத் தண்டுகளை உருவாக்கி அடர்த்தியாக வளரும்.
- இலை மற்றும் இலை உறைகளில் உள்ள சிறிய கடினமான முட்கள் தோலில் குத்தி அரிப்பு மற்றும் சொறியை ஏற்படுத்தக் கூடும்.
- வளர்ச்சிக்கு ஏற்ற சூழலில் அதிக உயரம் வரை வேகமாக வளரக் கூடியது.
- இதன் பூங்கொத்து நீளமான கதிர் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.

## களை மேலாண்மை முறைகள்



### 1. கைகளை எடுப்பு

களைச் செடிகளை இளம் பருவத்திலேயே கையால் பிடுங்கி அகற்ற வேண்டும். குறிப்பாக, களை பூத்து விதை உருவாக்கு வதற்கு முன்பே அகற்றுவது மிகவும் பயனுள்ளதாகும்.

### 2. உழவு மூலம் கட்டுப்படுத்துதல்

விதைப்பு செய்வதற்கு முன் நிலத்தை முறையாக உழவு செய்து முளைத்துள்ள களைச் செடிகளைஅழிக்கலாம். தேவையான இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட உழவு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### 3. தரமான மற்றும் சுத்தமான விதைகளைப் பயன்படுத்துதல்

களை விதைகள் கலக்காத தரமான பயிர் விதைகளைப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் களை புதிய வயல்களுக்கு பரவுவதைத் தடுக்கலாம்.

### 4. வேளாண் கருவிகளைச் சுத்தமாக வைத்திருத்தல்

களை அதிகமாகக் காணப்படும் வயலில் பயன்படுத்திய உழவு இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகளை நன்கு சுத்தம் செய்த பின்னரே பிற வயல்களில் பயன்படுத்த வேண்டும்.

### 5. நீர் வழியாக பரவுவதைத் தடுப்பது

பாசன நீர் மற்றும் மழை நீர் வழியாக களை விதைகள் பரவாமல் இருக்க வயல் வரப்புகள், கால்வாய்கள் மற்றும் நீர் வழிகளைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும்.



### 6. பயிரின் போட்டித் திறனை அதிகரித்தல்

பரிந்துரைக்கப்பட்ட இடைவெளியில் பயிர்களை நடவு செய்து, உரம், நீர் மற்றும் பிற சாகுபடி மேலாண்மை களை முறையாக மேற்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான பயிர் வளர்ச்சி களைகளின் வளர்ச்சியை கட்டுப்படுத்த உதவும்.

**7. மூடாக்கு**

பயிருக்கு ஏற்ற சூழலில் கரிமப் பொருட்கள் அல்லது பொருத்தமான மூடாக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் களை விதைகள் முளைப்பதை குறைக்கலாம்.

**8. களைக்கொல்லி பயன்பாடு**

களைக்கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டிய சூழலில், பயிர், களை இனம் மற்றும் களை வளர்ச்சி நிலைக்குஏற்பவேளாண்மைத் துறையால் பரிந்துரைக்கப்பட்ட களைக் கொல்லியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

ஒரே செயல் முறை கொண்ட களைக் கொல்லியை தொடர்ந்து பயன்படுத்துவதைத் தவிர்த்து, வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவது சிறந்தது.

**களைக்கொல்லிபயன்படுத்தும்போதுகவனிக்கவேண்டியவை**

விவசாயிகள் தன்னிச்சையாக களைக் கொல்லியைத் தேர்வு செய்து பயன்படுத்தக்கூடாது. பயிர் மற்றும் களை நிலைக்கு ஏற்ற அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட களைக்கொல்லியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மருந்தின் லேபிளில் குறிப்பிடப் பட்டுள்ள பயிர், அளவு, கலக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் முறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். காற்று அதிகமாக வீசும் நேரங்களில் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும். அருகிலுள்ள பயிர்களுக்கு மருந்து படாமல் கவனமாகத் தெளிக்க வேண்டும்.

களை வளர்ந்த பிறகு கட்டுப்படுத்துவதை விட, களை விதை உருவாக்குவதற்கு முன்பே கட்டுப்படுத்துவதே சிறந்தது.

சொறிப்புல்களை காணப்படும் வயல்களில் ஆரம்ப கட்ட களை அகற்றுதல், சுத்தமான விதை பயன்பாடு, வேளாண் கருவிகள் சுத்தம், முறையான பயிர் மேலாண்மை, தேவையான இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட களைக் கொல்லி பயன்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்வதன் மூலம்களைப் பரவலைக் குறைக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள வேளாண்மைத் துறை அலுவலகம் / வேளாண்மை அலுவலரை அணுகவும்.

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் , விருதுநகர்- 82480 80922.***

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-

IS 9537 CML-

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சாமந்தி செடிகளின் மகத்தான செயல் என்ன?



அடர் மஞ்சள் நிறத்தில் பூத்துக் குலுங்கும் சாமந்தி பூக்கள் வெறும் அழகுக்கு மட்டுமல்ல, இந்த தாவரம் மற்ற எந்த தாவரமும் செய்ய முடியாத ஒரு செயலை செய் வதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன. அது என்ன என்பதை விரிவாக பார்ப்போம்.

**சாமந்தியின் சாதனைகள்? (MARI GOLD)**

கேந்தி பூச்செடி என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. இது (TAGETES) வகையை சேர்ந்தது. இந்த செடிகள் மண்ணில் உள்ள சில உலோகங்களை (HEAVY METALS) உறிஞ்சி மண்ணை சுத்தப்படுத்துவதாக தெரிய வந்துள்ளது. வருங்காலத்தில் நிலத்து மண்ணில் காணப்படும் அந்த உலோகங்களை நீக்கி, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் இது முக்கிய பங்கு வகிக்கும் என்று ஆய்வு தரவுகள் உள்ளன.

**ஆய்வு தரவுகள் எப்படி இருக்கு?**

சில ஆய்வுகளின்படி, சாமந்தி செடிகளின் வேர்கள் மண்ணில் கலந்துள்ள சில கன உலோகங்களை உறிஞ்சி, தாவரத்தின் வேர்கள் மற்றும் பிற பகுதியில் சேமித்து வைக்கின்றன. அதாவது மண்ணிலுள்ள காட்மியம், நிக்கல் போன்ற உலோகங்களை, எடுத்துக் கொள்ளுவதும் அவற்றை மண்ணில் இருந்து அகற்றுவதிலும் நல்ல திறன் கொண் டவையாக இந்த செடி உள்ளது.

நகரமாயக்கல் விளைவாக ஏற்பட்டுள்ள கழிவுகள், கந்தக கழிவுகள் மாசடைந்த நீர் போன்ற காரணங்களால் உண்டாகும் கழிவுகளை கூட குறைக்கும் தன்மை இந்த செடிகளுக்கு உண்டு என நிரூபிக்கபட்டுள்ளது.

**சாமந்தி செடியில் மண்ணில் வேற என்ன மாற்றம் நிகழ்கிறது?**

மண்ணின் கார அமிலத்தன்மை, உலோக அளவு, வேதியியல் தன்மை மண் வகை மற்றும் பல காரணிகளை குறைத்து, மண்ணின் மாசு நீக்கம் செய்ய உதவுகிறது.

எனவே கல்வாழை செடிபோல சாமந்தி செடியும் கழிவுகளை அகற்றி சுற்றுப்புற சூழலியலுக்கேற்றவாறு செயல்படுகிறது என்றால் மிகையல்ல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி இரட்டிப்பு மடங்கு லாபம் பெறலாம்

## வேளாண்மை துணை இயக்குனர் தகவல்



விழுப்புரம், செப்.10

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டாரம், ஆத்மா திட்டத்தின் கீழ் வேளாண் உதவி இயக்குனர் கங்கா கௌரி, தலைமையில் வேளாண் துறை உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு மதிப்பு கூட்டுதல் மற்றும் இரண்டாம் நிலை வேளாண்மை குறித்து பிடாரிபட்டு கிராமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா, வரவேற்புரை நிகழ்த்தினார் வேளாண்மை துணை இயக்குனர் சுமதி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை கலந்து கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்தால் இரட்டிப்பு மடங்கு லாபம் பெறலாம் என்றும் விவசாயி களுக்கு விரிவாக விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேளாண்மை அலுவலர் சரண்ராஜ், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையில் நடைமுறையில் உள்ள மானிய திட்டங்கள் உற்பத்தியை பெருக்க தேவை உயர் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். மேலும் வேளாண் பொறியியல் துறையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானி யங்கள் குறித்தும், பண்ணை குட்டைகள் அமைத்தல் குறித்தும் விவசாயிகளுக்கு இளநிலை பொறியாளர் வெங்கடேச பெருமாள் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். இந்நிகழ்ச்சியை உதவி தொழில்நுட்ப மேலாளர் அன்பு இளவரசன் ஏற்பாடு செய்திருந்தார்.

# இப்கோ நானோ மாதிரி கிராமத் திட்டம் – நவீன வேளாண்மைக்கான ஒரு புதிய முன்னேற்றம்

சென்னை, செப்.10

நவீன வேளாண்மை முறையை ஊக்குவிக்கும் வகையில், இப்கோ நிறுவனம் 'நானோ மாதிரி கிராமத் திட்டம்' எனும் உள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் நேரடியாக நன்மை பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டம், நானோ உரங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுகிறது.

**தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு :**

நானோ யூரியா, நானோ டிஏபி மற்றும் சாகரிகா திரவ உரங்கள் 25% மானியத்தில் வழங்கப்படும். மேலும், 25% மானிய விலையில் இப்கோ ட்ரோன் மூலம் நானோ உரங்களை தெளிக்கலாம். நானோ உரங்களுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளும் தெளிக்கலாம்.

இத்திட்டம், தமிழகத்தில் திருவள்ளூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, ஈரோடு, தர்மபுரி, கோவை, கள்ளக்குறிச்சி, சேலம், தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர்மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டங்களில் மொத்தம் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் மானிய விலையில் நானோ உரங்களைப் பயன்படுத்தி பயனடைகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 25% வரை குருணை உரங்களை தவிர்த்து நானோ உரங்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.



# பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, செப்.10

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், செம்பரை கிராமத்தில் கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பயின்று வரும் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி மாணவர்கள் அருந்ததி, ஹஸ்வத்தா பத்மராஜ், கவிதாஞ்சலி,




ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, பூச்சிக்கொல்லி மருந்து களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கொடுத்தனர்.



விவசாயத்தில் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றைத் தவறான முறையில் பயன்படுத்தினால் விவசாயி களின் உடல்நலத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புகள் ஏற்படக்கூடும். எனவே, பூச்சிக்கொல்லி மருந்து களைப் பயன்படுத்தும் போது கீழ்க்கண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை அனைவரும் கடைப்பிடிப்போம்.

– மருந்தை வாங்குவதற்கு முன், அதன் லேபிளில் உள்ள வழிமுறைகள், அளவு மற்றும் எச்சரிக்கைகளை கவனமாகப் படிக்க வேண்டும்.

– பரிந்துரைக்கப்பட்ட அளவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

– மருந்தைக் கலக்கும் போதும், தெளிக்கும் போதும் கையுறை, முகக்கவசம், பாதுகாப்புக் கண்ணாடி, முழுக்கை ஆடை மற்றும் காலணி போன்ற பாதுகாப்பு உபகரணங்களை அணிய வேண்டும்.

– காற்று அதிகமாக வீசும் நேரங்களில் மருந்தைத் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

– மருந்து தெளிக்கும் போது உணவு, தண்ணீர் அல்லது புகையிலைப் பொருட்களை உட்கொள்ளக்கூடாது.

– குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் கால்நடைகள் மருந்து தெளிக்கும் இடத்திலிருந்து விலகி இருக்க வேண்டும்.

– மருந்து தெளித்த பிறகு, லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள காத்திருப்பு காலம் முடியும் வரை வயலுக்குள் நுழைவதையும், பயிர்களை அறுவடை செய்வதையும் தவிர்க்க வேண்டும்.

– பயன்படுத்திய பிறகு கைகள், முகம் மற்றும் உடலை சோப்பு மற்றும் தண்ணீரால் நன்கு கழுவ வேண்டும்.

இது போன்ற பல முக்கிய அறிவுரைகளை மாணவிகள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற

# தேனீ வளர்ப்பு பயிற்சி

மதுரை, செப்.10

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 10/09/26-இல் நடைபெற்ற தேனீ வளர்ப்பு பயிற்சியில் விருதுநகர், மதுரை, தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் என 15 பேர் கலந்து கொண்டனர்.



இப்பயிற்சியில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேன் எடுக்கும் முறை, தேனீக்களை தாக்கும் பூச்சி நோய்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் கொம்புத்தேனீ மற்றும் கொசுத்தேனீ வளர்ப்பு முறைகள் பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இத்துடன் கொம்புத்தேனீ மற்றும் கொசுத் தேனீகளை வளர்க்கும் முறைகள் மற்றும் தேன் எடுக்கும் செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ் வழங்கினார். மேலும் இப்பயிற்சியில் தேன் பதப்படுத்தும் முறைகள் மற்றும் தேனில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய செயல்முறை விளக்கமானது, முனைவர் கி.ஜோதிலட்சுமி, உணவியல் துறை என்பவரால் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் செயல்முறை விளக்கம் மூலம் பயனடைந்தனர். இப்பயிற்சி நிறைவில் பங்கு பெற்ற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பங்கு பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உணவு பாதுகாப்பில் தாவர இனப்பெருக்கத்தின் பங்கு : அறிவியல் வேளாண்மை மூலம் பசியற்ற உலகை நோக்கி...

'உணவே உயிர், உணவுப் பாதுகாப்பே மனித குலத்தின் எதிர்காலம். ' உலக மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின்படி, 2050-ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை சுமார் 9.7 பில்லியனை எட்டும். இந்த மக்கள் தொகைக்கு போதுமான, சத்தான மற்றும் பாதுகாப்பான உணவை உற்பத்தி செய்வது மனிதகுலத்தின் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது.

இந்தியாவைப் போன்ற விவசாய நாடுகளில், உணவுப் பாதுகாப்பு என்பது வெறும் தானிய உற்பத்தியை மட்டுமல்ல; அனைத்து மக்களுக்கும் போதுமான, சத்தான, தரமான மற்றும் மலிவு விலையில் உணவு கிடைப்பதை உறுதி செய்வதாகும். இந்த இலக்கை அடைய உதவும் மிக முக்கியமான அறிவியல் துறைகளில் ஒன்று தாவர இனப்பெருக்கம் (Plant Breeding) ஆகும்.

புதிய, அதிக மகசூல் தரும், நோய் மற்றும் பூச்சிகளைத் தாங்கும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை மாற்றங்களைச் சமாளிக்கும், மேலும் உயர்ந்த ஊட்டச்சத்து கொண்ட பயிர் ரகங்களை உருவாக்குவதன் மூலம், தாவர இனப்பெருக்கம் உலக உணவுப் பாதுகாப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது.

**உணவுப் பாதுகாப்பு என்றால் என்ன?**

உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வரையறைப்படி, 'அனைத்து மக்களும், எல்லா நேரங்களிலும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தேவையான போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவை உடல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பெறும் நிலையே உணவுப் பாதுகாப்பு ஆகும்.'

**உணவுப் பாதுகாப்பு நான்கு முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது :**

உணவு கிடைப்பது (Availability)
உணவைப் பெறும் திறன் (Accessibility)
உணவைச் சரியாகப் பயன்படுத்துதல் (Utilization)
தொடர்ச்சியான கிடைப்பு (Stability)

இந்த நான்கு அம்சங்களையும் வலுப்படுத்துவதில் தாவர இனப் பெருக்கம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**தாவர இனப்பெருக்கம் என்றால் என்ன?**

தாவர இனப்பெருக்கம் என்பது, விரும்பத்தக்க பண்புகளைக் கொண்ட பெற்றோர் ரகங்களைத் தேர்ந்தெடுத்து, கலப்பினம், தேர்வு மற்றும் நவீன உயிரித் தொழில்நுட்ப முறைகள் மூலம் மேம்பட்ட புதிய ரகங்களை உருவாக்கும் அறிவியலும் கலையும் ஆகும்.

**இதன் முக்கிய நோக்கங்கள்**

அதிக மகசூல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு, வறட்சி, உப்புத் தன்மை, வெப்பம் போன்ற அழுத்தங்களைத் தாங்கும் திறன், மேம்பட்ட தரம், அதிக ஊட்டச்சத்து, குறுகிய காலத்தில் முதிர்ச்சி, விவசாயிகளுக்கு அதிக இலாபம்.

**பசுமைப் புரட்சியும் தாவர இனப்பெருக்கமும்**

1960-களில் இந்தியா கடுமையான உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டது. அப்போது குறுகிய உயரம் கொண்ட, அதிக மகசூல் தரும் கோதுமை மற்றும் நெல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இந்தியா உணவுத் தானிய இறக்குமதி செய்யும் நாடாக இருந்து, தன்னிறைவு பெற்ற நாடாக மாறியது.

இந்த சாதனைக்கு தாவர இனப்பெருக்கமே அடித்தளமாக இருந்தது. இன்று இந்தியா உலகின் முன்னணி அரிசி, கோதுமை மற்றும் பல வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

உணவுப் பாதுகாப்பில் தாவர இனப்பெருக்கத்தின் முக்கிய பங்குகள்

**1. அதிக மகசூல் தரும் ரகங்களை உருவாக்குதல்**

குறைந்த நிலப்பரப்பில் அதிக மகசூல் பெறுவது காலத்தின் தேவையாக உள்ளது.

தாவர இனப்பெருக்கம் மூலம் உருவாக்கப்படும் அதிக மகசூல் தரும் ரகங்கள்

உணவு உற்பத்தியை அதிகரிக்கின்றன.
விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துகின்றன.
உணவுப் பற்றாக்குறையைக் குறைக்கின்றன.

**2. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ரகங்கள்**

இன்று விவசாயத்தின் மிகப்பெரிய சவால் காலநிலை மாற்ற மாகும்.

**இதனால் ஏற்படுபவை**

வறட்சி, அதிக வெப்பநிலை, திடீர் வெள்ளம், உப்புத்தன்மை, புதிய நோய்கள்.

இவற்றை சமாளிக்கும் திறன் கொண்ட ரகங்களை உருவாக்குவதில் தாவர இனப்பெருக்கம் முன்னிலை வகிக்கிறது.

**3. நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு**

ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் கணிசமான அளவு மகசூல் நோய் மற்றும் பூச்சி தாக்குதலால் இழக்கப்படுகிறது.

**எதிர்ப்பு ரகங்களை உருவாக்குவதன் மூலம்**

பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைகிறது.
உற்பத்திச் செலவு குறைகிறது.
சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.
மகசூல் நிலைத்தன்மை பெறுகிறது.

**4. ஊட்டச்சத்து மேம்பாடு (Biofortification)**

இன்றைய உலகில் மறைமுக பசியால் (Hidden Hunger) பல கோடி மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

**தாவர இனப்பெருக்கம் மூலம்**

அதிக இரும்புச் சத்து, அதிக துத்தநாகம், அதிக புரதம், அதிக வைட்டமின்–A, கொண்ட பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இது குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

**5. வறட்சி மற்றும் உப்புத்தன்மை தாங்கும் ரகங்கள்**

**தமிழ்நாட்டில் பல பகுதிகளில்**

நீர் பற்றாக்குறை, உப்புத்தன்மை, அதிக வெப்பம், பெரும் சவாலாக உள்ளது.

இதனை சமாளிக்கும் பயிர் ரகங்கள் எதிர்கால உணவுப் பாதுகாப்பிற்கு அவசியம்.

**6. குறுகிய கால ரகங்கள்**

**குறுகிய காலத்தில் அறுவடைக்கு வரும் ரகங்கள்**

குறைந்த நீரில் வளர்கின்றன. இரு அல்லது மூன்று பயிர்களை ஒரே ஆண்டில் சாகுபடி செய்ய உதவுகின்றன. காலநிலை ஆபத்தைக் குறைக்கின்றன.

**7. தரமான விளைபொருட்கள்**

இன்று சந்தையில் தரமான பொருட்களுக்கு அதிக தேவை உள்ளது.

**தாவர இனப்பெருக்கம் மூலம்**

சிறந்த சமையல் தரம், நல்ல சுவை, நீண்டகால சேமிப்பு, பதப் படுத்தலுக்கு ஏற்ற தன்மை, கொண்ட ரகங்கள் உருவாக்கப் படுகின்றன.

**நவீன தாவர இனப்பெருக்க தொழில்நுட்பங்கள்**

இன்றைய தாவர இனப்பெருக்கம் பாரம்பரிய தேர்வு முறை களைத் தாண்டி பல நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துகிறது.

1. **Marker-Assisted Selection (MAS)**

மரபணு அடையாளங்களைப் பயன்படுத்தி விரைவாக சிறந்த ரகங்களைத் தேர்வு செய்கிறது.

2. **Genomic Selection**

முழு மரபணு தகவல்களின் அடிப்படையில் எதிர்கால செயல் திறனை முன்கணிக்கிறது.

3. **Speed Breeding**

ஒரு ஆண்டில் பல தலைமுறைகளை உருவாக்கி ரக மேம்பாட்டை வேகப்படுத்துகிறது.

4. **Gene Editing (CRISPR)**

தேவையான மரபணுக்களைத் துல்லியமாக மாற்றி விரும்பத்தக்க பண்புகளை உருவாக்க உதவுகிறது.

5. **Doubled Haploid Technology**

மிகக் குறுகிய காலத்தில் தூய இனங்களை உருவாக்க உதவு கிறது.

**இந்தியாவில் தாவர இனப்பெருக்கத்தின் வெற்றிகள்**

தாவர இனப்பெருக்கத்தின் மூலம் இந்தியாவில் பல பயிர்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதிக மகசூல் தரும் நெல் ரகங்கள், நோய் எதிர்ப்பு கோதுமை ரகங்கள், எண்ணெய் வித்து மேம்பாட்டு ரகங்கள், பருப்பு வகைகளில் அதிக மகசூல் ரகங்கள், உயிரிச் செறிவூட்டப்பட்ட (Bio-fortifie) ரகங்கள்

இவை உணவுத் தன்னிறைவை வலுப்படுத்தியுள்ளன.

**தமிழ்நாட்டிற்கான வாய்ப்புகள்**

தமிழ்நாட்டில் எதிர்கால தாவர இனப்பெருக்கம் பின்வரும் துறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

வறட்சி தாங்கும் நெல் மற்றும் பருப்பு ரகங்கள், உப்புத்தன்மை தாங்கும் பயிர்கள், வெப்பத்தைத் தாங்கும் காய்கறிகள், அதிக புரதம் கொண்ட பருப்பு வகைகள், குறைந்த நீரில் வளரும் ரகங்கள், இயற்கை வேளாண்மைக்கு ஏற்ற ரகங்கள்.




### எதிர்கால சவால்கள்

எதிர்காலத்தில் தாவர இனப்பெருக்கம் எதிர்கொள்ள வேண்டிய முக்கிய சவால்கள்

காலநிலை மாற்றத்தின் வேகம், புதிய நோய்கள் மற்றும் பூச்சிகள், நிலப்பரப்பு குறைதல், நீர்ப்பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு, உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தபடி புதிய ரகங்களை உருவாக்குதல்.

முடிவுரை


உலக மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ‘குறைந்த வளங்களில் அதிக உணவு உற்பத்தி‘ என்பதே வேளாண்மையின் மிகப்பெரிய இலக்காக உள்ளது. இந்த இலக்கை அடைவதற்கான அறிவியல் அடித்தளமாக தாவர இனப்பெருக்கம் விளங்குகிறது. அதிக மகசூல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு, வறட்சி மற்றும் வெப்பத் தாங்குதிறன், மேம்பட்ட ஊட்டச்சத்து மற்றும் உயர்தர விளைபொருட்கள் கொண்ட புதிய ரகங்களை உருவாக்குவதன் மூலம், தாவர இனப்பெருக்கம் உலகளாவிய உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

எதிர்காலத்தில் மரபணு அறிவியல், உயிரித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் துல்லிய வேளாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும். அறிவியல் மற்றும் விவசாயம் கைகோர்க்கும் போது மட்டுமே ‘பசியற்ற, ஊட்டச்சத்து நிறைந்த, நிலையான உலகம்‘ என்ற கனவு நனவாகும்.

‘தாவர இனப்பெருக்கம் என்பது புதிய ரகங்களை உருவாக்கும் அறிவியல் மட்டுமல்ல; அது எதிர்கால தலைமுறையின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் மனிதகுலத்தின் நம்பிக்கையாகும்.‘

தகவல் : *வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி -621 104.*




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333